ரஞ்சிதம் குழுமம்

சிறுகவிதை சீர்மிகு எண்ணங்களுடன்!

பார் சிறக்கட்டும் நம் பார்வையின் சக்தியில்,

செயற்கையில்லா இயற்கை மிளிரட்டும் நம் முயற்சியில்,

தன்னலம் அழியட்டும் சுவடில்லாமல் நம் வளர்ச்சியில்,

மனிதநேயம் விழிக்கட்டும் நம் குழும ஒலியில்,

கல்வி வெய்யோனாய் ஒளிரட்டும் நம் உலக்கத்தில்,

நாளை நல்லதாய் பிறக்கட்டும் நம் உழைப்பில்,

வாழ்க்கை வானவில்லாய் வண்ணமயமாகட்டும் நம் ஆற்றலில்,

பிணி விலகட்டும் நம் தோழமை கூட்டில்,

வீந்தை குடியேறட்டும் நம் எல்லையில்!

இவையெல்லாம்,

மட்டில்லா மழையாய் பொழிய

கார்மேகமாய் எங்களுடன் இணைந்திடு தோழா

நம் ரஞ்சிதம் குழுமத்தின் சிறகுகள் விரியட்டும் அளவில்லாமல்

விண்ணைச் சென்றடைய அல்ல,

விண் வையம் வசப்பட!!!

சமுதாயத்தின் கீழ்நிலைக் குழந்தைகள் தங்கள் அறிவைப் பேணி வளர்க்கவும், தரமான கல்வியை அடையவும் உதவுவதே எங்களின் அமைப்பு. ரஞ்சிதம் குழுமம் அவர்களுக்கு, மேன்மையான கல்வி பெறுவதற்கான ஊன்றுகோலையும், ஒளிமயமான எதிர்காலம் அமையப் பெற சக்தியையும் அளிக்க வல்லது. மேலும் அவர்களது எதிர்காலக் கனவுகளை நன வாக்கி மகிழ்ச்சியை நாடவும், குழுமம் உறுதுணையாக இருக்கும்.

இவ்வுலகில் வாழும் மனிதனின் உடல் வளர்ச்சிக்கு உணவு அவசியம். அதைப் போன்று மனவளர்ச்சிக்கும் வாழ்க்கைக்கும் கல்வி மிகவும் அவசியமானது. ஆகையால், இவ்விரண்டையும் தர திட்டமிட்டு தொடங்கப்பட்ட ஒரு தன்னார்வத்தொண்டு அமைப்பே 'ரஞ்சிதம் குழுமம்'.

ஏழ்மையில் வாடுவோர்க்கு உதவுவது ஒரு வேலை அல்ல, அது கடவுளால் பரிசளிக்கப்பட்ட ஓர் உவகை. வரலாற்றுப் பதிவில் ஒரு வாக்கியமுண்டு எவன் ஒருவன் வறியவருக்கு உதவுகின்றானோ, அவனே அவர்களுக்கு கடவுளாகப் பாவிக்கப்படுவான் இதை அடித்தளமாக வைத்து எழுந்ததே 'ரஞ்சிதம் குழுமம்'.

வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

'வறியவர்க்கு உதவுதே ஈகை' என்பதை உணர்த்தும் இக்குறளை வழிப்பாட்டு பாவாகக் கொண்டது நம் குழுமம்.

நாங்கள் : ரஞ்சிதம் குழுமம்

'கல்வி' என்ற அழியா ஆயுதத்தைக் கொண்டு சமுதாயத்தை முன்னேற்ற ஒரு 'தோழமை குழுவால்' தொடங்கப்பட்ட இலாப நோக்க மற்ற அமைப்பு தான் ரஞ்சிதம் குழுமம்.

11 டிசம்பர், 2010 நிறுவப்பட்ட ரஞ்சிதம் குழுமம், வறிய மற்றும் தகுதியுடைய மாணாக்கர்களுக்குத் தரமான கல்வி பயிற்றுவிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டது. வறுமையால் வாடும் தகுதியுடையோர்க்கும், தரமான கல்விக்கும் உள்ள இடைவெளியைப் போக்கி, அதிலுள்ள தடைகளைத் தகர்த்தெறிவதே எங்களின் நோக்கம்.

கல்வியால் செறிவூட்டப்பட்ட அறிவு சமூக தீங்குகளை அழிப்பதுடன் நில்லாமல் சமூகத்தின் பொருளியல் வளத்தையும் அதிகரிக்கும் என்ற ஆணித்தரமான நம்பிக்கையால், வறிய மாணவர்களுக்கு தேவையான கல்வி வாய்ப்புகளை அமைத்து தர அயராது உழைக்கும் எண்ணம் கொண்டது ரஞ்சிதம் குழுமம்.

நன்கொடை

குறைந்தப்பட்சமாக மாதம் ரூ. 50 என்ற முறையில் நன்கொடை அளிக்கும் திட்டம் உள்ளது.

உறுப்பினர்கள் காலாண்டு திட்டத்தையும் பயன்படுத்தி கொள்ளலாம்.

காலாண்டு திட்டத்தின் கீழ் நன்கொடை அளிப்பவர்கள் மூன்று மாதத்தின் முதல் முப்பது நாட்களுக்குள் நன்கொடை அளிக்க வேண்டும்.

தங்களால் இயன்ற அளவிற்கு பொருளாகவோ, பணமாகவோ அல்லது பிற வழிகளிலோ எங்களுக்கு உதவலாம்.

எங்களின் ஆற்றல்மிக்க பிரிவுகள்

RGED unit (Ranjidam Group Education Development Unit)

(கல்வி தொண்டுப் பிரிவு)

என்றும் சுவை குன்றாத கனியாகிய கல்வியை வளர்ப்பதே கல்வித் தொண்டுப் பிரிவு. பொறியியல் பயிலும் ஏழை மாணவர்கள் மேற்படிப்பு பயில எதிர்நோக்கும் **'Gate'** கேட் தேர்வுக்கு தேவையான பயிற்சிப் புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.

அடிப்படைக் கணினி பாடக்கோப்பு, வரைகலை, போன்றவை மாணவர்களுக்கு சிறந்த முறையில் கற்பிக்கப்படும். வகுப்பில் பங்கேற்றவர்களை அங்கீகரிக்கும் பொருட்டு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மேலும், வகுப்பில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

இதர பாடங்களாக ஆங்கிலம், தட்டச்சு, சுற்றுப்புற மேன்மை போன்றவை பயிற்றுவிக்கப்படும்.

RG Media Unit *(ஊடகப்பிரிவு)*

பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியை ஊடகப் பிரிவு கையாளும்.

குறும்படங்கள் தயாரித்து அதன் மூலம் சமுதாயத்திற்கு நற்கருத்துகளை அளிக்க வல்லது இப்பிரிவு.

ரஞ்சிதம் குழுமத்தின் முக்கிய நிகழ்வுகளை மக்கள் அறியுமாறு செய்வதும் இப்பிரிவுதான்.

RGSD Unit (Ranjidam Group Sports Development Unit)

(விளையாட்டுப் பிரிவு)

1. 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே!' என்ற திருமூலர் வாக்கின் வழியில் மாணவர்களை விளையாட்டுத்துறையில் ஈடுபடுத்த உருவாக்கப்பட்டதே விளையாட்டுப் பிரிவு.

2. இப்பிரிவு மூலம் தகுந்த விளையாட்டுப் பயிற்சி பெற்ற மாணவர்கள் பற்பல முக்கிய போட்டிகளில் பங்கேற்க வாய்ப்பளிக்கப்படும்.

இப்பிரிவு* Sports Development Authority, Chennai*யால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

RGSS Unit (Ranjidam Group Social Service Unit)

(பொதுப்பணிப் பிரிவு)

சுற்றுப்புறத்தை காக்கவும், அதன் மேன்மையைப் போற்றவும் துவங்கப்பட்ட பிரிவுதான் இது.

மரக்கன்றுகளை நட்டு சுற்றுப்புற வளத்தை இப்பிரிவு வளர்க்கும்.

மேலும், சுற்றுப்புறத் தூய்மையை காக்க தேவைப்படும் பணிகளையும் இப்பிரிவு கையாளும்.

இலவச பொதுமருத்துவ முகாம் மற்றும் இலவச பல் மருத்துவ முகாம் இப்பிரிவு மூலமாக சிறப்பான முறையில் நடத்தப்படும்.

Rajidam Group Food care unit (RGFC)

சமுதாயத்தின் கீழ்நிலைக் குழந்தைகளின் பசியைப் போக்க இப்பிரிவு வழிவகைப் புரியும். இலவச அரிசி மூட்டை அளித்தல், சமபந்தி விருந்து போன்றவை இப்பிரிவின் உன்னத செயல்கள்.

இனிய செய்திகள் :

ரஞ்சிதம் குழுமத்தின் உறுப்பினர்கள் எப்போது வேண்டுமானாலும் தாங்கள் இதுவரை அளித்த நன்கொடை தொடர்பான தகவல்களைப் பெறலாம்.

பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு உடனே வழங்கப்படும்.

ரஞ்சிதம் குழுமத்தில் நடக்கும் நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகள் அனைத்தும் குறுந்தகவல் மூலமாக அறிவிக்கப்படும்.

இக்குழுமத்தின் உறுப்பினர்கள் மட்டுமல்லாமல் பிறரும் நன்கொடை வழங்கலாம்.

குழுமத்தின் அனைத்து நிகழ்வுகளும் Facebookல் அறிவிக்கப்படும். எங்களை Facebook மூலமாகவும் தொடர்வு கொள்ளலாம்.

மின் அஞ்சல் மூலம் தொடர்புகொள்ள ranjidamgroup@gmail.com

மின்னணு முகவரி : www.rgforhelp.org

எங்களின் வேண்டுகோள் :

தோழர்களே மேற்குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்கள் அனைத்தும் எங்களின் சொந்த திட்டங்களாகும்.

சமூகத்தைப் பேணி வளர்க்கத் தேவையான தனித்துவமிக்க கருத்துகள் உங்களிடம் இருக்குமாயின், அதனை எங்களிடம் தெரிவிக்கலாம்.

நீங்கள் அனைவரும் எங்களுக்கு ஒத்துழைப்பு அளித்து குழும வளர்ச்சிக்கு வழிவகுக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

ரஞ்சிதம் குழுமம் சீரும் செம்மையுமாக திகழ உதவ நினைக்கும் அனைத்து மனித நேயமிக்க நல்லுள்ளங்களை அன்புடன் வரவேற்கிறோம்.

அணையா விளக்காக இக்குழுமம் விளங்கி, ஏழை எளிய மக்களின் வாழ்க்கையில் ஒளிச்சுடராய் அமையட்டும்.

நேற்று ரஞ்சிதம் குழுமம் எங்களுடையது!

இன்று ரஞ்சிதம் குழுமம் நம்முடையது!

நாளை ரஞ்சிதம் குழுமம் மக்களுடையது!!

எந்நேரமும் - எவ்வகையிலும் - எவ்வழியிலும்